*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(4), 2020*

# தாய்மார்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் பெண்பிள்ளைகள் மீதான அதன் தாக்கமும்

**எம்.வை.எம். சுஹறா, எம்.சீ.எஸ். சாதிபா & எம்.ஸட். சுனூமி**
**அறபு மொழித்துறை**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

Correspondence: suheesafeek@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

குடும்பம், அதன் உறுப்பினர்களின் நலவாழ்வில் பலவழிகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது. குறிப்பாகப் பிள்ளைகளின் உடல்விருத்தி, உளவிருத்தி, மற்றும் ஒழுக்கவிருத்தி நிலைமைகளில் பாரியளவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இத்தகைய சூழ்நிலையில் தாய்மார்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான இடம்பெயர்வானது, குடும்பங்களில் நிலவுகின்ற வறுமை காரணமா அமைகின்றது. மறுபுறம், பெண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பானது, இலங்கையில் அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஒன்றாக அமைகின்றமையால், இத்தகைய வேலைவாய்ப்புக்களை அரசு அனுமதிக்கின்றது. குடும்பங்களில் நிலவுகின்ற வறுமையைப் போக்குவதற்பும் பிள்ளைகளின் சுபீட்சமான எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு, தாய்மார்கள் இத்தகைய வேலைவாய்ப்பை நாடிச் செல்கின்றனர். தாய்மார் வெளிநாடுகளுக்குச் செல்வதனால் குடும்பங்களில் பொருளாதாரம் சாதகமான அடைவுகளை அடைந்துள்ளது. இருப்பினும், அவற்றிற்குப் பகரமாக, பிள்ளைகள் பல்வேறு வகையான பாதிப்புக்களை எதிர்கொள்வதனையும் ஆய்வுகள் முன்வைக் கின்றன. இவ்வகையில் இவ்வாய்வு குறிப்பாக தாய்மார் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காகச் செல்வதனால் பெண்பிள்ளைகள் மீது ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றி ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்தகைய பாதிப்புக்களை ஆராய்வதற்காக இவ்வாய்வானது, பண்புரீதியான ஆய்வு முறையியலைப் பயன்படுத் தியுள்ளது. இதற்கான தகவல்களைச் சேகரிப்பதற்காக நோக்கமாதிரியை அடிப்ப டையாகக் கொண்டு, தாய்மார் வெளிநாடு சென்ற சுமார் 20 குடும்பங்களிலுள்ள, பத்து வயது தொடக்கம் இருபது வயதிற்குட்பட்ட பெண்பிள்ளைகள் தெரிவுசெய்யப்பட்டு, ஆழமான கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக் உட்படுத்தப்பட்டது. இவ்வாய்வானது தாய்மார் வெளிநாடு சென்ற குடும்பங்களிலுள்ள பெரும்பாலான பெண்பிள்ளைகள், பாடசாலை இடைவிலகல், அடிக்கடி பாடசாலைக்குச் செல்லாதிருத்தல், கல்வி அடைவுகளில் பின்தள்ளப்படல் ஆகிய கல்விரீதியான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். என்பதனையும், நெருங்கிய குடும்ப உறவினர்களால் கணிசமான பெண்பிள்ளைகள் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு முகங் கொடுப்பதனையும், குடும்பமட்டத்திலும், சக நண்பர்களாலும் புறமொதுக்கப் படுவதனையும் பிரதான கண்டுபிடிப்பாக இவ்வாய்வு முன்வைக்கின்றது. எனவே இவ்வாய்வானது தாய்மார் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களிலுள்ள பெண்பிள்ளை களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதற்கு ஆதாரமாக அமையமுடியும் என நம்பப்படுகின்றது.

**பிரதான சொற்கள் :** தாய்மார், மத்தியகிழக்கு வேலைவாய்ப்பு, பெண்பிள்ளைகள், கல்வி, பாலியல் துஸ்பிரயோகம்.

## 1. அறிமுகம்

இலங்கைக்கு அந்நிய செலவாணியை ஈட்டித்தரும் பல துறைகளில் முக்கியமான துறையாக பெண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு காணப்படுகின்றது (வெளிநாட்டு வேலைவாய்ப்பு

பணியகம், 2018). இவ்வேலைவாய்ப்பு என்பது வறுமையிலிருந்து குடும்பத்தைப் பதுகாப்பதாக அமைகின்றது (சேவ்த சில்றன் , 2016) . அத்துடன் இவ்வேலைவாய்ப்புக்கள் மூலமாக குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங்க முடியும் எனவும் கருதப்படுகின்றது (வேலைவாப்புப் பணியகம், 2018). இருந்த போதிலும், இத்தகைய பெண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அவர்களின் குடும்பத்தை விட்டும் தாய்மார்கள் நீண்டகாலம் பிரிந்து இருக்கின்ற வகையிலேயே அமைகின்றது. இலங்கையில் வெளிநாட்டு வீட்டுப் பணியாளர்களாகத் செல்கின்றவர்களில் எண்பத்தாறு சதவீதமானவர்கள் (86%) பெண்களாகவே இருக்கின்றனர் (ILO, 2018). இவர்களில் வீட்டுப் பணியாளர்களாக மத்தியகிழக்கிற்கு வேலைக்கு அமர்த்துவதில் முஸ்லிம் பெண்களுக்கு முன்னுரிமையும் வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் (2010) அறிக்கையின் படி, வீட்டுப் பணியாளர்களாகச் செல்லும் பெண்களில் 75% மானோர் திருமணமுடித்த பெண்களாவர். இவர்களில் 90% மானோர் பிள்ளைகளைக் கொண்ட குடும்பப் பெண்களாவர். இவர்களில் 46.2% மானோர் 6 தொடக்கம் 14 வயதுடைய பிள்ளைகளைக் கொண்டவர்களாகவும், 4.9 % மானோர் 15- தொடக்கம் 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகளைக் கொண்டுள்ள குடும்பப் பெண்களாகவும் இருக்கின்றனர். எனவே இவ்விளக்கங்களானது, பெரும்பாலான வீட்டுப் பணியாளர்களாகச் செல்கின்ற பெண்கள் தாய்மார்களாகவும், ஆறு வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்டுள்ளவர்களாகவும் காணப்படுவதனை அடையாளப்படுத்த முடிகின்றது. இத்தகைய தாய்மார்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்வதனால் அவர்களின் பிள்ளைகளை நீண்டகாலம் பிரிந்து இருக்கவேண்டி ஏற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (Save the children, 2006).

தென்னாசிய நாடுகள் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணிவருகின்ற நாடுகளாக உள்ளமையால் குடும்பாத்தில் தாயின் இடம் மிகவும் பிரதான வகிபாகங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இந்தவகையில் இலங்கையில் குடும்பத்தில் தாயின் வகிபாகங்கள் பிரதான செயன்மறையாக அமைந்துள்ளது. குடும்பத்தில் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் சமூகமயமாதல் செயன்முறையில் தாயின் பாத்திரம் பிரதான இடத்தை வகிக்ககின்றது. மேலும், பிள்ளைகளின் போசாக்கு, பாதுகாப்பு, என்பனவறற்றை வழங்குகின்ற செயற்பாடுனகளிலில் தாயின் பங்களிப்பும் பிரதானமாக அமைகின்றது (ILO, 2007; Agarval, 2006). இத்தகைய நிலமையில் தாய்மார் வெளிநாடு செல்லும் போது, தமது பிள்ளைகளுக்கு குடும்பரீதியான, சமூகரீதியான உணர்வுரீதியான பாதுகாப்புக்களை வழங்குவதற்காக , இத்தாய்மார்கள் குடும்பத்தை தந்தையின் அல்லது குடும்ப உறவினர்களின் கண்காணிப்பில் ஒப்படைத்துவிட்டு தொழிலுக்காகச் செல்கின்றனர் (Yeohand Lam, 2007). இலங்கையில் சமகாலத்தில் இவ்வாறு ஏனையவர்களின் கண்காணிப்பில் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டுச் செல்கின்ற நிலமைகள் அதிகரித்தும் வருகின்றன (Parena,2015). உதாரணமாக தாய் வெளிநாடு செல்வதாயின் அவர்களின் 05 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளைத் உறவினர்களின் அல்லது தந்தையின் பராமரிப்பில் பொறுப்பாக ஒப்படைத்துவிட்டுச் செல்வதனை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அனுமதித்துள்ளது (SLBC, 2015). மேலும் இவ்வறிக்கை குறிப்பிடுகையில், இத்தகைய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுமதியானது, அதிகமான தாய்மார்கள் குடும்பத்தின் வறுமையை காரணப்படுத்தி தொழில்களுக்காக மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்கினறனமையை அதிகரிக்கச் செய்துள்ளது.

இத்தகைய தாய்மார்களின் புலம்பெயர்வானது, குடும்பங்களிலும் , சமூகநிலமைகளிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (Abeyakoon et . al., 2008; De Silva, 2005; Ukawattha, 2009) . மேலும், குடும்பத்தின் அளவைக் குறைத்துள்ளது (De Silva, 2005), கருக்குடும்பமாக மாற்றியுள்ளது (Abeyakoon et . al. , 2008) பெண்தலைமைக் குடும்பங்கள் அதிகரித்துள்ளன (De silva,2006). அதே போல, பிள்ளைகள் வேறு நபர்களால் பராமரிக்கப்படுகின்ற நிலமைகளும் அதிகரித்துள்ளன (Ukawattha, 2009). இவ்வறான சாதகமான நிலமைகளைத் தாண்டி, குடும்பத்தில் பாதகமான பல விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. பிள்ளைகள் மீதான பாதிப்புக்கள் தொடர்பாக பல ஆய்வுகள் ( Eresnoa , 2019; Saventacil , 2006 ;

Toyota et. al., 2017) சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக, பிள்ளைகளின் வாழ்வு மற்றுமொரு புதிய குடும்பச் சுழ்நிலையில் மீளவடிவமைக்கப்படுகின்றது (Toyota et. al., 2017 ). இதேவேளை, பெற்றோர்களாகிய தாயும், தந்தையும் கட்டாயம் பிள்ளைகளின் பிரதான உரிமைகளான ஆரோக்கியமான உணவு, பாதுகாப்பான சூழல், மகிழ்ச்சிகரமான சுற்றுச்சூழல் ஆகியனவற்றை வழங்க வேண்டும் என சிறுவர் உரிமைகள் சாசனம் *(1995)* வலியுறுத்துகின்றது. இக்கருத்தை மேலும் வலியுறுத்துவதாக, உளவியல் ஆய்வுகள் தாயின் பராமரிப்பானது, பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்தில் மிகவும் பிரதான பங்கை வகிப்பதனை சுட்டிக்காட்டுகின்றது (பிறவுன், *1999*).

எனவே தாய்மார்களின் தொழிலுக்கான வெளிநாட்டுப் புலம்பெயர்வானது குடும்பங்களில் பொருளாதார ரீதியாக விளைவுகளை ஏற்படுத்துகின்ற ஒன்றாக இருப்பினும், தாய்மார்களுக்கு பிள்ளைகள் மீது இருக்கின்ற கடமையான வகிபாகங்களை இவர்கள் நேரடியாக மேற்கொள்ளமுடியாத சூழலுக்குள் தள்ளுகின்றது. இதனால், தாய்மார் தமது குடும்பத்தில் தமது வகிபாகங்களைப் நீண்டகாலத்திற்கு ஆற்றமுடியாமல் போகின்ற நிலமைகள் உருவாகின்றது. இந்தவகையில் இவ்வாய்வானது, குறிப்பாக குடும்பத்திலுள்ள தனது பிள்ளைகளின் நலகன்களுக்காக வீட்டுப் பணியாட்களாக வெளிநாடு செல்வது எத்தகைய தாக்கங்களை அவர்களின் பெண்பிள்ளைகளின் மீது ஏற்படுத்துகின்றது என்பதனை ஆராய்கின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

சமூகவலைத் தளங்களின் செல்வாக்குகளால கடந்த பத்து வருடங்களாக சமூகத்தில் சமூகச் சீர்கேடுகளின் அளவும் அதிகரித்துள்ளது குறிப்பாக பெண்பிள்ளைகள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளன (Brown, 2019). பெற்றோர்களுடன் இருக்கின்ற பிள்ளைகளை விட, வேலைக்குச் செல்கின்ற பெற்றோர்களின் பிள்ளைகள் இத்தகைய பாதிப்புக்களுக்கு உள்ளாகுவது அதிகமாக இருப்பதனை அறிக்கைகள் அடையாளப்படுத்தகின்றன (Hettige, 2010). உதாரணமாக கிராமிய மட்ட சமூகவிபரத் தகவல்கள் *(2016)* தாய் வெளிநாட்டுக்குச் சென்றுள்ள குடும்பத்திலுள்ள பிள்ளைகள் இளவயதுத் திருமணத்திற்காக குடும்பங்களால் கட்டாயப்படுத்தப்படல், வீட்டு பராமரிப்புக்களைப் பொறுப்பேற்கத் திணிக்கப்படல், பாடசாலைக் கல்வியை இடைநிறுததும் சூழ்நிலைக்குள் திணிக்கப்படல் போன்றனவற்றை எதிர்கொள்வதனை அடையாளப்படுத்தியுள்ளது. எனவே இவ்விடயங்கள் தாய்மார் வெளிநாடு சென்ற குடும்பங்களில் பிள்ளைகள் சவால்களை எதிர்கொள்வதனை அடையாளப்படுத்துகின்றது. அதே போல, பத்திரிகைச் செய்திகளில் பாலியல் வன்முறைகளுக்குள்ளாகின்ற பெண்பிள்ளைகளில் அதிகமானவர்கள் தாய்மார் வெளிநாடு சென்றுள்ள குடும்பப் பெண்பிள்ளைகள் என்பதனையும் முன்வைக்கின்றன (வீரகேசரி, *2017*, *2018*, *2019*). இருந்த போதிலும் இவை தகவல்களாகக் காணப்படுகின்றதே தவிர, விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்ட ஆய்வறிக்கைகளாக இல்லை. எனவே இத்தகைய விடயத்தை அடிப்படையாகக்கொண்டு, தாய்மார்கள் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களில் பெண்பிள்ளைகள் எத்தகைய நிலமைகளை எதிர்கொள்கின்றனர் என விஞ்ஞானரீதியாக ஆராயவேண்டியுள்ளது,

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் எத்தகைய பொருளாதார முன்னேற்றங்களை வறுமையான குடும்பங்களில் ஏற்படுத்தியுள்ளது என்பது தொடர்பான ஆய்வுகள் அதிகளவில் முன்னெடுகப்பட்டுள்ளன (Antman , Francisca, 2014 ; Acosta, Pablo, 2011 ; Dias, 2004). குடும்பத்தைப் பாராமரிக்கின்ற பாரிய பொறுப்பை சுமந்திருக்கும் குடும்பப் பெண்கள், தமது குடும்பத்தின் பொருளாதார நிலமைகளைச் சீர்செய்ய வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடி பயணிக்கின்றனர். இதன்போது அவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியான அடைந்திருப்பினும், குடும்பத்தில் பிள்ளைகள் எதிர்மறையான உளவியல்சார், உடலியல்சார் விளைவுகளை எதிர்கொண்டுள்ளமையை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன (Rasika , 2015; Senaratna et. al., 2011). அதேபோல, பிள்ளைகள் எதிர்கொள்கின்ற கல்விப் பிரச்சினைகள் தொடர்பாகவும் பல்வேறு ஆய்வுகள் விளக்கங்களை முன்வைக்கின்றன (Gunatilleke , 2004 ; Lakshani, 2014; Marlowe et.al., 2004 ). இவ்வாய்வுகள் பொதுவாகப் பிள்ளைகளைப் பற்றிய

விடயங்களை முன்வைப்பினும், அக்குடும்பங்களிலுள்ள பெண்பிள்ளைகள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றி தனித்துவமாக விரிவாக முன்வைக்கவில்லை. எனவே இத்தகைய ஆய்வு இடைவெளியை அடிப்படையாகக் கொண்டு, தாய் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களிலுள்ள பெண்பிள்ளைகள் எவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர் என்பதனை இவ்வாய்வு விரிவாக ஆராய முனைகின்றது.

## 3. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது அதன் நோக்கமாக, 'தாய்மார்கள் வேலைவாய்ப்புக் காரணமாக வெளிநாடு செல்வதனால், அவர்களின் குடும்பத்திலுள்ள பெண்பிள்ளைகளில் ஏற்படுகின்ற தாக்கங்களை அடையாளப்படுத்துவதனை' முன்வைக்கின்றது.

## 4. ஆய்வு முறையியல்

### 4.1 ஆய்வுப் பிரதேசம்:

இவ்வாய்வுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ஓட்டமாவடிப் பிரதேசம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பிரதேசமானது கோரளைப்பற்று வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்டதாக அமைந்துள்ளது. அத்துடன் இப்பிரதேசத்தில் சுமார் 12 கிராமங்கள் காணப்படுகின்றன. இக்கிராமங்கள் 1990 களில் ஏற்பட்ட இனவன்முறைகளால் அதிகளவில் பாதிக்ப்பட்ட பிரதேசமாக அமைந்துள்ளமையால், அதன் சமூகப் பொருளாதார நிலமைகள் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. இக்கிராமங்களில் ஒன்றான காவத்தைமுனைக் கிராமத்தில் நிலவுகின்ற வறுமை காரணமாக அதிகளவிலான முஸ்லிம் பெண்கள் மத்தியகிழக்கு தொழில்வாய்ப்பிற்காகப் புலம்பெயர்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இத்தகைய பிரதேசம் ஆய்வுப் பிரதேசமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

### 4.2 ஆய்வு மாதிரி

இவ்வகையில், ஆய்வுப் பிரதேசத்தில் வேலைவாய்ப்புக்காக சுமார் 126 குடும்பங்களிலுள்ள பெண்கள் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களாக காணப்படுகின்றன. இவற்றில் தாய்மார் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களாக சுமார் 106 குடும்பங்கள் காணப்படுகின்றன. இத்தகைய குடும்பங்களில் பெண்பிள்ளைகளைக் கொண்டுள்ள குடும்பங்களாக சுமார் 98 குடும்பங்கள் காணப்படுகின்றன. இத்தகைய குடும்பங்களிலிருந்து ஆய்வின் நோக்கம் கருதி, நோக்க மாதிரியை அடிப்பயைடாகக் கொண்டு பத்து வயது தொடக்கம் 20 வயதுவரையுள்ள பெண்பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களிலிருந்து சுமார் 20 குடும்பங்கள் ஆய்வுக்காகத் தெரிவு செய்பயப்பட்டுள்ளன.

### 4.3 தரவு சேகரித்தல்

இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முதல் நிலைத் தரவுகளானது, ஆழமான கலந்துரையாடல் (in-depth interview), விடய அறிவுள்ளவர்களுடனான (Informative interview) கலந்துரையாடல், அவதானம் ஆகியனவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பான இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக ஆய்வுக்கட்டுரைகள், நூற்கள், பத்திரிகைகள், அறிக்கைகள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 5. எண்ணக்கரு, கோட்பாட்டு விளக்கம்

குடும்பம் என்பது சமூகத்தின் மிகச்சிறிய அலகாகக் காணப்படுகின்றது. குடும்பம் ஒன்றில் தாயின் பிரதான வகிபாகங்கள் பிள்ளைகளைச் சமூகமயப்படுத்தும் செயற்பாட்டில், ஆழுமை

உருவாக்கத்தில் பிரதான பங்கை வகிக்கின்றது. குடும்பத்தில் தாய் இல்லாமலாகும் இடத்தில் அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகளில் ஏற்படுகின்ற பாதிப்புக்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற உலகளாவிய ரீதியான காரணிகளாக பல்வேறு காரணிகள் முன்வைக்கப்படுகின்றன. Marlowe ஏனையோரும் (2014) பிள்ளைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரணிகளாக மோசமான மனவெழுச்சிப் பிணைப்புக்கள், பின்தங்கிய கல்வி நடவடிக்கைகள் , கல்வி உபகரணங்களின் பற்றாக்குறை, குடும்பப் பராமரிப்புக்கள், நிதி மற்றும் மனிதவளப் பற்றாக்குறை, பராமரிப்பாளர்களின் குறைந்த கல்வித்தரம், குறிப்பிடத்தக்க உறவினர்கள் மட்டும் பராமரிப்பாளர்களாகக் காணப்படுகின்றமை ஆகிய காரணிகள் பிள்ளைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாக அடையாளப்படுத்துகின்றார்.

சிறுவர் உரிமை ஆணைக்குழு (2013) தாய் வெளிநாடு சென்ற பின்னர் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டவர்களின் வீடுகளில் தங்குதல், தாயின் பிரசன்னமற்ற வீடு, பிள்ளைகள் மீதான துஸ்பிரயோகங்கள், புறக்கணிப்புக்கள், மற்றும் தந்தையின் போதைப் பொருள் பாவனை என்பன பிள்ளைகளில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற பிரதான கரணங்களாக அடையாளப்படுத்துகின்றது. எனவே இங்கு பிள்ளைகள் தாய்மார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்ற பின்னர், பிள்ளைகளில் பாதிப்பை உருவாக்குகின்ற காரணிகளாக மேற்குறிப்பிட்ட காரணிகள் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேபோல பிள்ளைகளைப் பாதிக்கின்ற சில காரணிகளாக சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு விடயங்கள், முறையற்ற சூழமைவுகள் ஆகியன் அதிகளவில் ஆதிக்கம் செல்துவதாக யுனிசெப் (2016) அடையாளப்படுத்துகின்றது.

இத்தகைய காரணிகளில் இருந்து இவ்வாய்வானது வெளிநாடு சென்றுள்ள தாய்மார்களின் பிள்ளைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரணிகளான கல்வி, துஸ்பிரயோகங்கள் , புறமொதுக்கம் ஆகிய மூன்று பிரதான காரணிகளை மாறிகளாகக் கொண்டு , பெண்பிள்ளைகளில் அவற்றின் தாக்கங்களை ஆராய முனைகின்றது.

## 6. கலந்துரையாடலும் முடிவுகளும்

### 6.1 கல்வீ நிலைமை

#### 6.1.1 பாடசாலை வருகை

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்பிள்ளைகளில் அதிகமான (80%) பெண்பிள்ளைகள் தொடர்ச்சியாகப் பாடசாலைக்குச் செல்வதில்லை. இருப்பினும் 20% மான பெண்பிள்ளைகள் அவர்களின் கல்வியைத் தொடர்ந்தும் ஊக்கத்துடன் மேற்கொண்டு வருகின்றனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்துப் பெண்பிள்ளைகளிலும் 30% மானவர்கள் மூத்த பெண்பிள்ளைகளாக காணப்படுகின்றனர். இவர்களில் 50% மானவர்கள் இடைவிலகியுள்ளனர். தாய் வெளிநாடு சென்ற பின்னர் தாயின் தாய் இக்குடும்பத்தைப் பராமரிப்பதனால், அவரின் வயது முதிர்ந்தமை காரணமாக பிள்ளைகளையும், அவர்களுக்கான கடமைகளையும் எல்லோருக்கும் செய்யமுடியாமல் போகின்றது. இச்சந்தர்ப்பத்தில் இக்குடும்பத்தில் முதல் பிள்ளையாக இருக்கின்ற பெண்பிள்ளைகள் அவர்களின் சகோதர, சகோதரிகளின் பராமரிப்பை தவிர்க்கமுடியாது மேற்கொள்ளவேண்டி இருக்கின்றது.

இப்பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதனால் இத்தகைய கடமைகளைச் சரியாகச் மேற்கொள்வதில் சிரமங்களையும், அதிக வேலைப்பழுக்களையும் எதிர்கொள்கின்றனர். இதனால் அடிக்கடி குடும்பத்தில் தாயினது தாயின் கடுமையான வார்த்தை மற்றும் தண்டணைகளுக்கும் உள்ளாகவேண்டி இருக்கின்றது. இத்தகைய சூழ்நிலைகள் மூத்த பெண்பிள்ளைகளைத் தாமாகவே பாடசாலைக் கல்வியைக் கைவிடவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளியுள்ளது இவ்விடயம் பற்றி பெண்பிள்ளை குறிப்பிடும்போது: எனக்கு படிக்கவேண்டும் என்ற ஆசை இன்றும் உள்ளது. ஆயினும் கடந்த 02 வருடமாகப் பாடசாலைக்குச் செல்வதனை முழுமையாகக் கைவிட்டுவிட்டேன். தம்பி, தங்கைகள் பாடசாலை செல்வதனால் அவர்களின் ஆடைகளைக்

கழுவவேண்டும், அவர்களைப் பராமரிக்க வேண்டும் சுகவீகமான நேரங்களில் கவனிக்கவேண்டும் இப்படி பல வேலைகளை நான் பார்க்க வேண்டியுள்ளது. எனது தாயின் தாய் வயதானவராக இருப்பதனால் இவற்றை அவரால் செய்யமுடியாதுள்ளது. இதனால் பெண்பிள்ளை நான்தான் பார்க்க வேண்டும் என என் உறவினர்களும் எனக்குச் சொல்வர். இதனால் படிப்பை கைவிடவேண்டியிருந்தது. ஆனால் எனது தாய்க்கு இவ்விடயம் தெரியாது…..

இவரின் கூற்று தாய் குடும்பத்தில் மேற்கொள்ள வேண்டிய வேலைகளை பெண்பிள்ளையாக இருப்பதனால் மேற்கொள்ள வேண்டியுள்ளமையை அடையாளப்படுத்துகின்றது. இதனால் கற்றல் மேற்கொள்கின்ற வயதில், தனது சகோதரர்களைப் பராமரிக்கின்ற செயற்பாடுகளை மெற்கொள்ளும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே இங்கு பெண்பிள்ளையின் வகிபாகம் இடம் மாறியுள்ளது. மேலும், 20% மான மூத்த பெண்பிள்ளைகள், தமது பராமரிப்பாளர்களால் பாடசாலைக் கல்வியைக் கற்பது அவசியமான ஒன்றல்ல என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுவதனால் காலப்போக்கில் அவர்களுக்கு கல்வி மீதான ஆர்வம் குறைந்து கல்வியைக் கைவிட்டுள்ளனர். இருந்தபோதிலும் இவ்எல்லாப் பெண்பிள்ளைகளும் (100%) தாயுடன் இருந்த காலப்பகுதியில் கல்வி கற்பதில் அதிக விருப்பம் கொண்டிருந்தமையையும் இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

கோர்டஸ் மற்றும் ஏனையோரின் ஆய்வானது (2016) தாய் வெளிநாடு செல்வதனால் பிள்ளைகள் வயது வேறுபாடின்றி குடும்பத்தில் வீட்டு வேலைகளுக்குக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்பதனை அடையாளப்படுத்துகின்றது. மேலும், இவர் பெண்பிள்ளைகள் வயதை அடைகின்றபோது சமைத்தல், கழுவுதல் ஆகிய வேலைகளுக்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்பதனை சுட்டிக்காட்டுகின்றார். சேனாரத்ன (2012) ன் ஆய்வானது, தாய் வெளிநாடு செல்வதனால் அவர்களின் பிள்ளைகள் பாடசாலையை விட்டும் அதிகளவில் பாடசாலை இடைவிலகலுக்குட்படுகின்றமையை வெளிப்படுத்துகின்றது. எனவே இங்கு தாயின் வெளிநாட்டு வேலைவாய்ப்பானது, பெண்பிள்ளைகளை வீட்டுவேலைகளைப் பொறுப்பேற்கச் செய்வதோடு, பிள்ளைகள் இதனால் பாடசாலைக் கல்வியை கைவிடுவதனையும் அடையாளப்படுத்துகின்றது. எனவே இம்முடிவுகளை ஒத்த முடிவினை ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களிலுள்ள மூத்த பெண்பிள்ளைகளிலும் அடையாளப்படுத்த முடிகின்றது.

இருந்தபோதிலும், அதிகமான பெண்பிள்ளைகள் (70% )பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்கின்றனர். இருப்பினும் இவர்களில் கணிசமானவர்கள் (40%) அடிக்கடி பாடசாலைக்குச் செல்வது தடைப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். இதற்கு இவர்கள் தங்கியிருக்கின்ற குடும்பங்களில் ஏற்படுகின்ற அதிக வேலைகள், பிள்ளைகளுக்கு ஏற்படும் சுகவீனங்கள், குடும்பத்தில் நிகழ்கின்ற விசேட நிகழ்வுகள் ஆகியனவற்றின்போது, பராமரிப்பாளர்கள் பெண்பிள்ளைகளை பாடசாலைக்குச் செல்ல அனுமதிப்பதில்லை. பாடசாலைக்குச் செல்லும் விருப்பம் இவர்களுக்கு இருப்பினும் தவிர்க்கமுடியாமல் பாடசாலை செல்வது அடிக்கடி தடைப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளியிட்ட அறிக்கையானது, தாய் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களிலுள்ள பெண்பிள்ளைகள் வீட்டு வேலைகளில் அமர்த்தப்படும் வீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிடுகின்றது. மேலும் சேவ் த சில்றன் (2006) தாய் வெளிநாடு சென்றுள்ள குடும்பப் பிள்ளைகள் வீட்டு வேலைகளில் அமர்த்தப்படுவதனால், பாடசாலைகளில் அக்குடும்பத்திலுள்ள மாணவர்களின் வருகையானது குறைந்தளவில் காணப்படுகின்றது என்றும், இதனால் அவர்களிடையே கல்வியைக் கைவிடல், இடைவிலகல்கள் என்பன அதிகளவில் காணப்படுவதாகவும் அடையாளப்படுத்துகின்றது. எனவே இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களிலுள்ள பெண்பிள்ளைகள் பாடசாலைக்குச் சமூகமளிப்பதில் தாயின் வெளிநாட்டுப் பயணம் பாதகமான செல்வாக்கைச் செலுத்துகின்றது என்பதனை இவ்வாய்வு முன்வைக்கின்றது.

#### 6.1.2 கற்பவரின் தயார்நிலையும், அடைவுகளும்

இப்பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் (70%) பாடசாலை செல்கின்றவர்களாகக் காணப்படினும், அவர்களில் 15% மட்டுமே கல்வியில் விருப்பமுடையவர்களாகவும், உயர் மதிப்பெண்களையும்

பெற்றுள்ளனர். ஏனையவர்கள் கல்வியில் உயர் புள்ளிகளை பெறுவதில் பின்தங்கிக் காணப்படுகின்றமையை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

இவர்களில், கணிசமானளவு (55% ) பராமரிப்பாளர்கள் , பெண்பிள்ளைகளின் கல்வி மீது அதிக அக்கறை செலுத்துவதில்லை. அத்துடன், அவர்களுக்கு கல்வியின் பெறுமதி தொடர்பான அறிவும் தகவலும் குறைவாகக் காணப்படுகின்றன. எனவே இவர்கள் இப்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதில்லை. இப்பிள்ளைகளுக்கு அவர்களின் கல்விக்குத் தேவையான கல்விசார் உபகரணங்களை வழங்குவதுமில்லை. இத்தகைய காரணங்களால் இப்பிள்ளைகளுக்கு இயல்பாகவே கல்வியில் காணப்படுகின்ற விருப்பங்கள் காலப்போக்கில் மறைந்து விடுகின்றன. இத்தகைய விடயம் அவர்களின் கல்வி அடைவுகளில் பாரியளவில் பாதகமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளன.

இருந்த போதிலும், இவர்களில் அதிகமானவர்களின் (50%) கல்வி அடைவுகள் தாய் இருக்கும் போது சிறந்த நிலையில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் தாய்மார்கள் கல்வித்தரம் குறைந்தவர்களாகக் காணப்பட்டாலும், பிள்ளைகளின் கல்வி மீது கொண்டிருந்த அக்கறை போன்ற காரணங்களால் இத்தகைய அடைவுகள் சிறப்பாக இருந்துள்ளதனை ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. மேலும் சேவ் த சில்றன் (*2006*) பாடசாலைக்கு அடிக்கடி மாணவர்கள் சமூகமளிக்காமையானது பிள்ளைகளின் கல்வி அடைவில் தாக்கம் செலுத்துவதாகக் சுட்டிக்காட்டுகின்றது.

குறிப்பாக இவர்கள் சார்ந்துள்ள குறிப்பிடத்தக்களவான (30%) குடும்பங்களில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள், இரவு நேரங்களில் இவர்கள் கற்றலில் ஈடுபடவும், பாடங்களை மீட்டிக் கொள்ளவும் தடையாக அமைவதாகவும், இதனால் கற்றல் செயற்பாடுகளில் வீட்டில் மேற்கொள்வதற்கான சந்தோசமான மனோநிலைமைகள் இல்லாமையும் அதிகம் செல்வாக்குச் செலுத்துவதாக இவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

*எனக்குப் படிக்கவேண்டும் என்கின்ற ஆசை இருக்கின்றது. இருப்பினும் இரவு நேரத்தில் எனது பாட்டி நாடகம் பார்ப்பதற்காகப் பக்கத்து வீட்டிற்குச் செல்வார். இவ்வேளைகளில் நான் வீட்டில் தனியாக இருக்க விரும்பாத பாட்டி என்னையும் அவருடன் அழைத்துச் செல்வார். இதனால் பக்கத்து வீட்டில் சுமார் பத்து மணிவரை இருக்கவேண்டியுள்ளது. நானும் இப்படி தொடர்ந்தும் செல்வதனால் நாடகத்தைப் பார்க்கும் ஆர்வமுடையவராகவும் இருக்கின்றேன். படிக்க விருப்பமிருப்பினும் இரவில் அதற்கான சூழ்நிலையில்லை….*

அதேவேளை சில பெண்பிள்ளைகள் (15%) அவர்களைப் பராமரிப்பவர்களின் கட்டுப்பாடுகள், கல்வியில் காணப்படுகின்ற ஆர்வம், பிள்ளைகளின் வளர்ப்பில் காட்டுகின்ற இறுக்கங்கள் காரணமாகத் தொடர்ச்சியாக பாடசாலை செல்பவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் அவர்களுக்குக் கிடைத்துள்ள கல்விக்குச் சாதகமான வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல் இரண்டும் கற்பதற்கான சந்தர்ப்பங்களை சிறப்பாக வழங்குவதனால் அவர்களின் அடைவுகளும் உயர்வானதாகக் காணப்படுகின்றது. இது பற்றி பதிலளித்த பெண்பிள்ளை குறிப்பிடும் போது,

*நான் வகுப்பில் மூன்றாவது பிள்ளையான வருகின்றேன். எனது தாயின் சகோதரி மிகவும் கண்டிப்பானவர். நான் எப்படியாவது கற்று நல்ல நிலையை அடையவேண்டும் என்பது எனது தாயின் கனவு என்றும், அதற்காக வெளிநாட்டில் மிகவும் கஸ்டப்படுவதாகவும் அடிக்கடி கூறுவார். பாடசாலை ஆசிரியருடன் அடிக்கடி எனது படிப்பைப் பற்றி விசாரித்துக் கொள்வார். இதனால் எனக்கு படிக்கவேண்டும் நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற கனவு உள்ளது.*

தாயின் வெளிநாட்டுப் புலம்பெயர்வானது பிள்ளைகளின் கல்வியுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளதாக யேஹ் மற்றும் லெம் (*2017*) குறிப்பிடுகின்றனர். மேலும் பெர்ணான்டோ (*1999*) தாய் வெளிநாடு செல்வதனால் பிள்ளைகளின் கல்விக்கான ஒத்தழைப்பு பராமரிப்பாளர்களால் முறையாக வழங்கப்படுவதில்லை என்ற வாதத்தை முன்வைக்கின்றார். எனவே, இவ்வாய்வானது தாயின் வெளிநாட்டுப் புல்பெயர்வு கணிசமானளவு பெண்பிள்ளைகள் கல்வி நிலையில் பின்தள்ளப்படக் காரணமாயுள்ளதனை அடையாளப்படுத்தகின்றது.

### 6.2 பிள்ளைகள் மீதான துஸ்பிரயோகங்கள்

#### 6.2.1 மொழிரீதியான தாக்குதல்கள்

அதிகளவிலான (95%) மான பெண்பிள்ளைகள் பராமரிப்பாளர்கள் மற்றும் ஏனைய குடும்ப உறவினர்களின் வாய்மொழி ரீதியான துஸ்பிரயோகங்களை எதிர்கொள்கின்றனர். தவறுகள் இடம்பெறும் போதும், தெரியாத விடயங்களை தவறுதலாக புரிகின்றபோதும் அவற்றைத் தவறாகச் சுட்டிக்காட்டுவதனை விட, வேண்டுமென்று அச்செயல்களை மேற்கொள்வதாகப் பராமரிப்பாளர்கள் கருதுகின்றனர். இதனால் பெண்பிள்ளைகள் அதிகமாக வாய்மொழிரீதியாக தண்டணைகளுக்குட்படுவதாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் குறிப்பிடுகின்றனர். தாம்புரிகின்ற விடயங்களைத் தெளிவாக விசாரரணை செய்வதில்லை என்பதனையும் குறிப்பிடுகின்றனர். அதிகமானவர்கள் (65%) பிள்ளைகளுக்கு உண்மையில் குறிப்பிட்ட விடயங்கள் சரியானவையா?, தவறானவையா? எனும் விளக்கம் தெரியாதுள்ளதை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

முறையாக இவ்விடயங்களை அணுகாமல் வாய்மொழிமூலம் தண்டிக்கின்ற நடைமுறைகள் அதிகளவிலான குடும்பங்களில் காணப்படுகின்றன. இவர்களில் கணிசமான (80 % ) பிள்ளைகள் தாயுடன் இருக்கும்போது இத்தகைய தாயின் மொழிப் பிரயோகங்களை எதிர்கொண்டவர்காளக இருந்துள்ளனர். இருப்பினும் அவை மனதளவில் பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும், எனினும் தற்போது பராமரிப்பாளர்கள் பிரயோகிக்கின்ற மொழிப்பயன்பாடுகள் மிகவும் மனதிற்கு வேதனையை ஏற்படுதததுவதாகவும் குறிப்பிடுகின்றனர். கண்டிப்புடன் கூடிய மொழிப்பிரயோகங்கள் அதிகமாகக் காணப்படினும், அப்பேச்சுக்களில் தம்மைப் பராமரிப்பது தொடர்பான அக்கறை காணப்படுவதனைவிட பிளளைகள் மீதான வெறுப்பின், சுமையின், கோபத்தின் காரணமாகவும் பிரயோகிகக்கப்படுகின்ற வார்த்தைகளாகவே அதிகம் இருக்கின்றன என்பதனை ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. இதனால் இம்மொழிகள் பெரும்பாலான பெண்பிள்ளைகளின் மனதைப் பெரிதும் பாதிப்பதாக அமைகின்றது.

இது பற்றி விளக்கும் போது: ….என்னைப் பராமரிக்கின்றவர்கள் எதற்கு எடுத்தாலும் என்னைக் கடிந்துகொண்டே இருப்பார்கள் . எனது தம்பி, தங்கை ஆகியோரையும் இப்படித்தான் அணுகுகின்றனர். அடிக்கடி, நாங்கள் தொல்லையாக இருப்பதாகவும் கூறிக் கொள்வார். அவர்களின் பிள்ளைகளுடன் எனது சகோதரர்கள் விளையாடும்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளால் பிள்ளைகள் சண்டையிடுகின்றபோது என்னைத் திட்டி பிள்ளைகளைக் கவனிக்கவேண்டும் எனக் கூறுவார்கள். எனக்கு அழுகைதான் வருகின்றது…..

பெண்பிள்ளைகளுக்கெதிரான துஸ்பிரயோகங்களில் மொழிரீதியான துஸ்பிரயோகம் உளவியல் ரீதியான பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என லஉறா *(2015)* குறிப்பிடுகின்றார். இத்தகைய பாதிப்பு நீண்டகால உளவியல் தாக்கங்களை ஒருவரில் தோற்றுவிப்பதாக அமைகின்றது என சேனாதர்ன மற்றும் ஏனையோர் *(2011)* விளக்குகின்றனர். எனவே ஆய்வுப் பிரதேசத்திலும் மொழிரீதியான துஸ்பிரயோகங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. இதனால் கணிசமான பிள்ளைகள் (95%) கவலை, எரிச்சல், அழுகை போன்ற பலவகையான மனரீதியான பதிப்புக்களுக்கு அடிக்கடி உள்ளாகியுள்ளமையை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

#### 6.2.2 பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்கள்

இவ்வாய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்பிள்ளைகளில் குறிப்பிடத்தக்களவினர் (45%) நெருங்கிய குடும்ப உறவினர்களது பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக 30% மானவர்கள் நெருக்கமான ஆண் உறவினர்களினால் அடிக்கடி பாலியல் தொந்தரவிற்கும் (முத்தமிடல், கட்டியணைத்தல், பாலியல் பார்வைகள், பாலியல் வார்த்தைகளைப் பேசுதல்) உள்ளாகியுள்ளமையை அடையாளப்படுத்தப்படுகின்றது.

இவர்களில் அதிகமானவர்கள் (90%) பாலியல்சார் நடவடிக்கைகளின் ஆபத்துக்கள், விளைவுகள் பற்றி நன்கு தெரிந்தவர்களாக இருக்கின்றனர். அவர்களை தொந்தரவு செய்கின்றவர்ளைப்

பற்றியும் நன்கு அறிந்தவர்களாக இருக்கின்றனர். இருப்பினும் அவற்றைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவதில் ஆர்வமுடையவர்களாக் இருப்பினும். அவற்றை மேற்கொள்ள விருப்பமற்றவர்களாக இருக்கின்றனர். இதற்கு தங்களின் குடும்பம் பற்றி அதிக பயம் இவர்களிடையே காணப்படுகின்றமை காரணமாயுள்ளது. இருப்பினும் அவர்களால் முடியுமான வகையில் இத்தகைய தொந்தரவுச் சூழலிலிருந்து தவிர்ந்துகொள்ளும் நடவடிக்கைகளை மிகவும் நிதானமாக மேற்கொள்கின்றமையும் இவ்வாய்வு அடையாளப்படுத்துகின்றது. இது பற்றி பெண்பிள்ளை ஒருவர் குறிப்பிடும் போது: …..எனது மாமா எந்த நேரத்தில் வருவார் என்பது எனக்கு நன்கு தெரியும். அப்படியான நேரத்தில் நான் அயலிலுள்ள வீட்டில் எனது வகுப்புப் பிள்ளையுடன் படிக்கச் செல்கின்றேன் எனக் கூறி, எனக்கு வீட்டில் அனுமதி தருவதற்கு முன்னரே சென்றுவிடுவேன். மாமா போய்விட்டார் எனத் தெரிந்த பின்னர்தான் வீடு வருவேன். இப்படி எத்தனை நாளைக்குத்தான் ஒழிந்து கொள்வது, சிலவேளை பாட்டி வீட்டிலுள்ள வேலை காரணமாக அல்லது அதிகநேரம் அங்கு இருப்பதன் காரணமாக அழைக்கின்றபோது நான் வந்தே ஆகவேண்டும். அப்போது என்னால் அவரின் தொல்லையிலிருந்து தப்பிக்க முடிவதில்லை. பல தடவைகள் இதனை எண்ணி என் தாய் மீது எனக்குக் கோபம் வரும்…….

இக்கூற்றானது, பாலியல் தொந்தரவுகளைப் பிள்ளகைள் விரும்பாமலுள்ளமையையும், அவற்றிலிருந்து தவிர்ப்பதற்காக பல நடவடிக்கைளை கடைப்பிடிப்பதனையும், அத்தகைய சந்தர்ப்பங்களில் தாயின் மீது அவர்களின் கோபம் திரும்புவதனையும் விளக்குகின்றது. மேலும் இவ்வாய்விற்குட்படுத்தப்பட்டவர்களில் 20% மான பெண்பிள்ளைகள் தாயின் வெளிநாட்டு புலம்பெயர்வின் பின்னர் தாயினதும், தந்தையினதும் நெருங்கிய உறவினர்களால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவற்றை வெளியில் சொன்னால் குடும்பத்தின் மானத்தைப் போக்கிவிடுவதாகவும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இதனால் அவற்றை வெளியில் சொல்வதில் அச்சமுடையவர்களாயுள்ளனர். இத்தகைய செயல்களால் பெண்பிள்ளைகளுக்கு அடிக்கடி பதட்டம், பயம், தலைவலி, தூக்கமின்மை ஆகியன ஏற்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர். பாலியல் துஸ்பிரயோகத்திற்குட்படுகின்ற பிள்ளைகள் உணர்வு ரீதியான மற்றும் நடத்தை ரீதியான திரிபுகளுக்குட்படுகின்றனர் (மார்லேவி மற்றும் ஏனையோர், 2004; பெர்ணான்டோ மற்றும் விஜித, 1999). மேலும், பிள்ளைகள் பாலியல் ரீதியான தொல்லைகளுக்கு உட்படுவதனால், தனிமை, பாதுகாப்பின்மை மற்றும் நலிவடைந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் (பிரான்சிகா , 2018). இலங்கையில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகமானது ஆபத்தான பிரச்சினையாக காணப்படுவதாகவும், தாயின் பிரசன்னம் இல்லாத குடும்பங்களில் அதிகளவில் இத்துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவதாகவும் WBC (2015) அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. குறிப்பாக பெண்பிள்ளைகளை நெருக்கமான உறவினர்களே பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உட்படத்துவதாகவும், இது பிள்ளைகளில் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், நீண்டகால உளவியல் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் இவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிள்ளைகளில் இத்தகைய ஆய்வு முடிவுகளை ஒத்த முடிவுகள் காணப்படுகின்றன. இவ்வாய்வில் அதிகளவிலான (95%) பிள்ளைகள் இத்தகைய செயல்களை வெறுப்பவர்களாகவும், அடிக்கடி தம்மை இத்தகைய நிகழ்வுகள் பற்றிய நினைவுகள் தொல்லைப்படுத்துவதாகவும் குறிப்பிடுகின்றனர். அத்துடன் அவற்றை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதிலுள்ள ஆபத்துக்களையும் விளங்கியுள்ளனர். இருப்பினும் இத்தகைய நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கான ஆற்றல் இல்லாதவர்களாக இருப்பது மிகவும் கவலையையும் தூக்கமின்மையையும் ஏற்படுத்துவதாகச் சுட்டிக்காட்டினர். மேலும் இவர்கள் பாராமரிக்கப்படுகின்ற குடும்பங்களில் பாதுகாப்பாக இல்லை என்பதனையும் இவ்வாய்வு அடையாளப்படுத்துகின்றது.

எனவே இங்கு குடும்ப உறவினர்களின் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உட்படுகின்ற பெண்பிள்ளைகள் உளரீதியாக பாதுகாப்பின்மையை உணர்கின்றமையை இவ்வாய்வு வெளிக்காட்டுகின்றது. தாய் இல்லாத இடத்து பிள்ளையின் பராமரிப்பையும், பாதுகாப்பையும் உறவினர்கள் ஏற்றுக் கொண்ட நிலையில் இத்தகைய குடும்பங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கான கடமையை தவறவிட்டுள்ளமையை ஆய்வு வெளிப்படுத்துகின்றது.

### 6.3 சமூக உறவுகளிலிருந்து புறமொதுக்கம்

#### 6.3.1 குடும்பங்களின் புறமொதுக்கம்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்களவான (60%) பெண்பிள்ளைகள் தாய் வெளிநாடு சென்றமையை காரணப்படுத்தி, உறவினர்களின் பிள்ளைகளிடையேயும், உறவினர்களிடையேயும் ஒதுக்கப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர். இவர்களில் 35% மான பெண்பிள்ளைகள், தமக்குச் சரியான அன்பும், பராமரிப்பும், அவர்கள் மீதான கவனமும் மிகவும் குறைவாகவே ஏனையோரால் கிடைக்கின்றது என்பதனை வெளிப்படுத்தினர். குடும்ப உறவினர்களின் வீடுகளில் இடம்பெறுகின்ற விஸேட நிகழ்வுகளில், அவர்களின் பிள்ளைகளாலும், உறவினர்களாலும் அவர்கள் மீது அனுதாபம் காட்டப்படுவதாகவும், அத்தகைய அனுதாபம் அவர்களுக்கு விருப்பமற்றது என்றும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் குறிப்பிட்டனர். இத்தகைய செயற்பாடுகள் மனரீதியாக வருத்தத்தை ஏற்படுத்துவதனால் பெரும்பாலான பிள்ளைகள் தாமாகவே இத்தகைய நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிக் கொள்கின்றவர்களாகவும், பராமரிப்பாளர்களிடமிருந்து அன்பையும், ஆதரவினையும் எதிர்பார்ப்பதனை விரும்பாதவர்களாகவும் தமது கருத்தை வெளிப்படுத்தினர். *சிறுவர் உரிமைகள் சாசனம் (2016) 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்றோர்கள் கட்டாயம் வழங்க வேண்டும் எனப் பணிக்கின்றது. இத்தகைய பராமரிப்புக்கள் கிடைக்காதவிடத்து பிள்ளைகள் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் மீது வெறுப்பு, ஒதுங்கி நடத்தல், போன்ற நடத்தைகளுக்கு உட்படுவதாக கூட்மேன் ( 2018) குறிப்பிடுகின்றார்.*

#### 6.3.2 நண்பர்களின் புறமொதுக்கம்

இவர்களில் ஒரு சிலர் (35%) தங்களின் நண்பர்களால் வகுப்பறைகளில் சரியாக அவர்கள் மீது கவனம் செலுத்துவதில்லை என்பதனை முன்வைக்கின்றனர். தாய் இருந்தபோது பாடசாலைக்குச் செல்லும் நேரம், உடைகள் என்பன சீராகவும், நேர்த்தியாகவும் இருந்தன. ஆயினும் தற்போது அத்தகைய ஒழுங்குகளைத் தொடர்ச்சியாகப் பேணாமையால், ஏனைய மாணவிகள் இவர்களை வகுப்பறையில் கவனிக்கின்ற விதம் குறைவாக இருக்கின்றது . இதே 25% மான பிள்ளைகளின் கருத்துப்படி, அடிக்கடி பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பதனால், வகுப்பறையில் நண்பர்களுக்கிடையில் இடம்பெறுகின்ற சம்பவங்களுடன் தொடர்ச்சியான தொடர்புகளும் இல்லாமலுள்ளமையால் மாணவிகள் அவர்களை குழுக்களிலும். நண்பர் வட்டங்களிலும் கவனித்துக் கொள்வதும் குறைவாக இருக்கின்றதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

*இது பற்றிக் குறிப்பிடும் போது: நான் தாய் இருந்தபோது தொடர்ந்து பாடசாலைக்குச் சென்றேன். இப்போது பாட்டியும், தந்தையும் சரியாகக் கவனிப்பதில்லை. அடிக்கடி பாடசாலைக்ககுச் செல்வதில்லை. ஆடைகளில் சுத்தமில்லை என நண்பிகள் சொல்லுவர். இதனால் எனக்கு ஏனைய நண்பர்களுடன் பழகுவதற்கு வெட்கமாக இருக்கின்றது. ….*

*இன்னுமொருவர் பதிலளிக்கையில்: …. நண்பர்கள் என்னுடன் அன்பாக இருக்கின்றனர். எனினும் சிலவேளைகளில் நான் பாடசாலை செல்லாமல் விடுவதனால், என்னிடம் சில விடயங்களைப் பற்றி பேசமாட்டார்கள். அது எனக்குக் கோபத்தை ஏற்படுத்தும். என்னைச் சில விடயங்களில் என்னை அவர்கள் சேர்த்துக் கொள்வதில்லை. இதனால் அடிக்கடி அவர்களுடன் சண்டைபோட்டு பேசாமல் இருப்பேன். இக்கூற்றுக்கள் வகுப்பறை மாணவர்களுடனான பிணைப்புக்களுக்கிடையில் இடைவெளிகள் நிலவுகின்றமையை வெளிப்படுத்துகின்றது.*

மேலும் ஒரு சிறு தொகையான (15% ) பெண்பிள்ளைகள் ஏனைய மாணவர்களின் இத்தகைய நடத்தைகள் காரணமாகத் தாமாகவே ஏனையவர்களை விட்டும் விலகி தனிமையில் இருப்பதாகவும், அது ஒரு வகையில் கவலையையும், மறு வகையில் நிம்மதியையும் தருவதாகவும் குறிப்பிடுகின்றனர். இவர்களில் 10% மாணவர்கள் நண்பர்களுக்கிடையில் இடம்பெறுகின்ற முரண்பாடுகள், ஒதுக்கம் காரணமாக அவர்களுக்கிடையில் ஏற்படுகின்ற மனக்கசப்புக்களல் நெருங்கிய நண்பர்களையும் இழந்துள்ளனர்.

### 7. ஆய்வு முடிவுகளின் சுருக்கம்

பெரும்பாலான (85%) பெண்பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் தாயின் வெளிநாட்டுப் புலம்பெயர்வு பாதகமாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை இவ்வாய்வு முடிவாக வெளிப்படுத்துகின்றது. இவர்களில் கணிசமான அளவு மூத்த பெண்பிள்ளைகள் (30%) தாய்வெளிநாடு சென்ற பின்னர், தம்மைப் பராமரிக்கின்றவர்கள் இருந்தும் , தமது குடும்பத்தைப் பராமரிப்பதற்கான பொறுப்பை தவிர்க்க முடியாமல் ஏற்கவேண்டிய சூழ்நிலைகளால், பாடசாலைக் கல்வியை கைவிடல், அடிக்கடி பாடசாலை செல்வதனை தவிர்த்தல் ஆகியனவற்றை எதிர்கொண்டுள்ளனர். இருப்பினும் 20% மான பெண்பிள்ளைகள் பராமரிப்பாளர்களின் ஆதரவினாலும், தனிப்பட்ட கல்வி ஆர்வத்தினாலும் தொடர்ச்சியாக கல்வியில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்களவினர் (15 %) சிறந்த கல்வி அடைவுகளைக் அடைந்துள்ளனர். இருப்பினும், பெரும்பாலானவர்கள் (85%) இத்தகைய அடைவினை அடைந்துகொள்வதில் பல்வேறு சவால்களையும் தடைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக கல்வி உபகரணங்களின் பற்றாக்குறை, வீட்டில் கல்வி கற்பதற்கான சூழ்நிலையின்மை, சார்ந்து இருப்பவர்கள் கல்வி தொடர்பாகக் கொண்டுள்ள அக்கறையின்மை, கல்வி தொடர்பாக கண்காணிப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்ற சூழ்நிலைகள் ஆகியன பெண்பிள்ளைகளின் இத்தகைய பாதகமான கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பெண்பிள்ளைகள் மீதான துஸ்பிரயோகங்களில் மொழிரீதியான துஸ்பிரயோகத்திற்கு பெரும்பாலான (95%) பெண்பிள்ளைகள் உள்ளாகியுள்ளனர். பராமரிக்கும் குடும்ப உறுப்பினர்கள் பெண்பிள்ளைகளின் குடும்பத்தைப் பராமரிப்பதனை பாரிய சுமையாகக் கருதுகின்ற தன்மை, தனிப்பட்ட குடும்ப பிரச்சினைகள் ஆகியனவற்றைப் பராமரிப்பாளர்கள் அடிக்கடி எதிர்கொள்வதனால், அவற்றின் எதிர்வினைகளை பெண்பிள்ளைகள் எதிர்கொள்ளவேண்டி ஏற்படுகின்றது. இத்தகைய விடயங்கள் பெண்பிள்ளைகளை கவலை, தனிமை, தன்னை தாழ்வாக எண்ணுகின்ற உளரீதியான பாதிப்புக்களுக்கு இட்டுச் சென்றுள்ளன.

பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்களுக்கும் கணிசமான பிள்ளைகள் உட்படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் பாலியல் தொல்லைகளுக்கு அதிகமான பிள்ளைகள் உட்பட்டுள்ளனர். இவர்களுக்கு பாலியல் தொல்லை புரிகின்ற நபர்கள் பற்றித் தெளிவாகத் தெரிந்தும் உள்ளது. அத்துடன் 90% மானவர்கள் பாலியல் துஸ்பிரயோகம் பற்றிய தகவல்கள் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். இருப்பினும் தனதும், தமது குடும்பத்தினதும் எதிர்காலம் கருதிய பயம், அச்சம் காரணமாக அவற்றை வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டி வருகின்றனர். அதனால் தொடர்ச்சியாக பாலியல் தொல்லைகள், துஸ்பிரயோகங்களை எதிர்கொள்கின்றனர்.

இவர்களில் குறிப்பிடத்தக்களவிலான பெண்பிள்ளைகள் (25%) நெருங்கிய குடும்ப உறுப்பினர்களால் பாலியல் வல்லுறவிற்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய பாலியல் தொல்லைகள், துஸ்பிரயோகங்கள் ஆகியன அவர்களை பயம், பதட்டம், சோகம், கவலை, தூக்கமின்மை ஆகிய சிக்கலான மனநிலைகளுக்குள் தள்ளியுள்ளதனை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது. இவர்களில் அதிகமான பெண்பிள்ளைகள் (40%) இத்தகைய சூழ்நிலைகளிலிருந்து தங்களைத் தாங்கள் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை வீடுகளில் மேற்கொண்டும் வருகின்றனர். இவை சிலவேளைகளில் வெற்றியளிப்பதாகவும், சிலவேளைகளில் தோல்வியையும் அடைகின்றன.

65% மான பெண் பிள்ளைகள் தாய்வெளிநாடு சென்ற பின்னர், ஏனைய குடும்ப உறவினர்களிடமிருந்து அன்பு, பாதுகாப்பு, சரியான கவனிப்பிற்கு உட்படுத்தப்படவில்லை என்பதனை இவ்வாய்வு உறுதி செய்கின்றது. அதிகளவில் இவர்கள் புறமொதுக்கப்படுகின்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. இத்தகைய ஒதுக்கங்களை காலப்போக்கில் விளங்கி

பெண்பிள்ளைகள் குடும்ப உறவினர்களிடமிருந்து தாமாகவே ஒதுங்கி நடக்கின்ற நிலைமைகளும் குறிப்பிடத்தக்க (35%) மானவர்களில் இவ்வாய்வு கண்டுபிடித்துள்ளது.

பெண்பிள்ளைகளின் நண்பிகளிடமிருந்தும் இத்தகைய புறமொதுக்கப்படுகின்ற நிலைமைகளுக்கு பெண்பிள்ளைகள் உள்ளாகியுள்ளனர். குறிப்பாக சிறுஅளவிலானவர்கள் (35%) தமது பாடசாலை நண்பர்களால் புறமொதுக்கப்படுகின்றனர். இதற்கு தொடர்ச்சியாக பாடசாலை செல்லாத நிலைமைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மேலும் குறிப்பிட்ட சில பெண்பிள்ளைகளின் வெளிப்புறத் தோற்றங்கள், குடும்ப நிலைமைகள் புறமொதுக்கப்படுகின்ற நிலைமைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை பெண்பிள்ளைகளுக்குள் தாழ்வு மனப்பான்மைகளை எற்படுத்தியுள்ளதனை இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது.

## 8. முடிவுரை

குழந்தைப் பருவம் மற்றும் கட்டிளமைப்பருவங்கள் ஆகியன ஒரு பிள்ளையின் மிக முக்கியமான வாழ்க்கைக்கால பருவமாகக் கருதப்படுகின்றன ஹீட்டரிங்டன் மற்றும் பலர் (1993). இப்பருவங்களில் இவர்களுக்குக் கிடைக்கின்ற சமூக, குடும்பச் சூழல்கள் அவர்களின் ஆளுமைகளை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. குடும்பம் என்பது பிள்ளையின் விருத்தியில் பிரதான இடத்தை வகிக்கின்றது. அதிலும் தாயின் பராமரிப்பும், ஆதரவும், கண்காணிப்பும் சமூகப் பிரஜையாக பிள்ளைகளை மாற்றுவதில் பெரும் பங்களிப்புச் செலுத்துகின்றன. குடும்ப வறுமை காரணமாக வெளிநாடு செல்வதனால் குடும்பத்தில் பொருளாதார ரீதியாகப் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை செழிப்பாக்க முடியும் என்ற காரணத்தால் தாய்மார் வெளிநாடு செல்கின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை ஏனையவர்களின் பராமரிப்பில் விட்டுச் செல்கின்றனர். இப்பராமரிப்பாளர்கள் பிள்ளைகளைப் பராமரிப்பார்கள் என்கின்ற நம்பிக்கையில் விட்டுச் செல்கின்றனர். இருப்பினும் இவ்வாறு தாய் குடும்பத்தை விட்டுப் புலம்பெயர்ந்து செல்வதனால் பெண்பிள்ளைகள் பல்வேறு வகையான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அதிலும் அதிகளவிலான பெண்பிள்ளைகள் கல்வி ரீதியாக இடைவிலகலுக்கும், கல்வி அடைவுகளில் பாதகமான நிலையை அடைந்துகொள்கின்றனர்.

நெருங்கிய உறவினர்களால் பாலியல் துஸ்பிரயோகத்திற்கும் உள்ளாக்கப்படுகின்றனர். மேலும் உறவு மட்டத்திலும், நண்பர்கள் மட்டத்திலும் புறமொதுக்கப்படுகின்ற சூழல்களையும் எதிர்காள்கின்றனர். இத்தகைய அனைத்து நிலைகளும் அவர்களைப் பல்வேறுவகையான மனச்சிக்கலுக்குள் தள்ளியுள்ளன.இத்தகைய பெண்பிள்ளைகள் மீதான பாதிப்புனக்கள் அவர்கள்மீது நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமைகின்றது. எனவே கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இத்தகைய விடயங்களைக் கருத்திற்கொண்டு, தாய்மார்ள் வெளிநாடு செல்கின்ற குடும்பங்களிலுள்ள பெண்பிள்ளைகள் மீதான பராமரிப்பதற்க முறைப்படுத்தப்பட்ட கொள்கைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

## உசாத்துணைகள்

Acosta, Pablo. (2011). "Female Migration and Child Occupation in Rural El Salvador." *Population Research and Policy Review*, 30 (4), 569-589.

Agesa (2010), For Work as 'Housemaids' in Foreign Countries for Extended Periods" in The Migrant Housemaid, special issue of Lagos: Journal of the Centre for Religion and Society, Vol 28, No 2.

Antman, Francisca M. (2013). "The Impact of Migration on Family Left Behind." In *International Handbook on the Economics of Migration*, A. F. Constant and K. F. Zimmermann eds., Edward Elgar: Northampton, MA

Athauda, T., Fernando D & Nikapotha, A., (2000). "Behavioral Problems among Pre-School Children of Migrant Mothers in Sri Lanka," *Journal of the College of Community Physicians* in Sri Lanka, Vol. 5.

Brown, J., (1999). Bowen Family Systems Theory and Practice: Illustration and Critique *Australian and New Zealand Journal of Family Therapy*, 20(2), 94---103.

Center for Women's Research, Colombo, (1998). "Women, Poverty and Family Survival – From Dependent Housewife to Breadwinners - Some Aspects of Migration of Female Workers to the Middle East", in Women, Poverty and Family Survival.

Cortes, Patricia and Jessica Pan. (2013). "Outsourcing Household Production: Foreign Domestic Workers and Native Labor Supply in Hong Kong." *Journal of Labor Economics*, 31(2): 327-71.

Dias M, Jayasundere R. Sri Lanka: the anxieties and opportunities of out-migration, In: Ahn P-S, editor. Migrant workers and human rights – out migration from South Asia. International Labour Organisation; 2004. P. 153-82.

Fernando, Vijita, (1999). "The Physical, Psychological and Social Impact on Children of Women Leaving the Country to Work as "Housemaids" in Foreign Countries for Extended Periods" In The Migrant Housemaid, special issue of Lagos: Journal of the Centre for Religion and Society, Vol 28, No 2.

Francisca M. Antman (2018), Women and Migration *University of Colorado Boulder and IZA*.

Gunatilleke, Godfrey, ed. (1992). "Sri Lanka", in the Impact of Labour Migration on House.

Hetherington, E. & Parke, R. D. (1993). Child Development (4th edition). McGraw-Hill, Inc.: New York.

Hettige, ST, (2000). Social Impact of the Migraiton of Female Workers to the Middle East, Report submitted to the Presidential Secretariat, Jan 18, 1999.

Lakshani Dissanayake,Vasana Chandrasekara, D D M Jayasundara, (2014), The Impact of Mothers Migration for Work Abroad on children's Education in Sri Lanka, Https://www.researchgate.net/publication/260109743,research Gate.

Laura Carolina Acosta Gomez (2015), Migration and its impact on children's lives: a literature review, Faculty of Social Work, university of Island.

Marlowe M, Disney G, Wilson KJ.(2004). Classroom management of children with emotional and behavioural disorders. Emotional and Behavioural Difficulties, 9(2): 99-114

Priyadarshanie, Sujeewa DL et al. (2000). "Children of Migrant Mothers – What are their Rights? Relevance and Expression of Child Rights in Contemporary Sri Lanka", in Initiatives in Research and Education for Development, Asia, Vol. 5, Colombo.

Rapoport, Hillel, Docquier, Frédéric, 2006. "The Economics of Migrants' Remittances." In: Kolm, S.-C., Ythier, J.M. (Eds.), *Handbook on the Economics of Giving, Reciprocity and Altruism*, Vol. 2. North Holland, Amsterdam, pp. 1135–1198. Chapter 17.

Rasika Jayasuriya & Brian Opeskin (2015), The Migration of Women Domestic Workers from Sri Lanka: Protecting the Rights of Children Left Behind, *Cornell International Law Journal Vol. 48*.

Ratnayake K. Female migration from Sri Lanka of Middle East: Is the remedy worse than the Disease? *Sri Lanka Journal of Population Studies.* 1999; **2**: 42-59.

Senaratna, B.C.V, H. Perera & P. Fonseka,(2011), *Mental Health Status and Risk Factors For Mental Health Problems in Left-Behind Children of Women Migrant Workers in Sri Lanka*, 56 CEYLON MED. J. 153, 157.

Sri Lanka bureau of foreign employment, annual statistical report of foreign employment 3 (2012), http://www.slbfe.lk/page.php?lid=1&mid=54; Sri Lanka ministry for foreign employment promotion and welfare, migration profile: Sri Lanka 13 (2013),